உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 07.07.2026 • மலர் 04 • இதழ்: 188 • செவ்வாய்க்கிழமை • Edition : Nagercoil • 07.07.2026 • Vol : 04 • Issue : 188 • Page : 4 • Rs. 5/-

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

# திமுகவுக்கு வரச்சொல்லி ரூ.50 கோடி பேரம்

## ஸ்ரீவைகுண்டம் தவெக எம்.எல்.ஏ பரபரப்பு குற்றச்சாட்டு



தூத்துக்குடி, ஜூலை 7

தமிழக அரசியல் சூழ்நிலை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு பரபரப்பாக இருக்கிறது.

த.வெ.க. எம்.எல்.ஏ.வை விலைக்கு வாங்க ரூ.180 கோடியில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக முன்னாள் அமைச்சர் செந் தில் பாலாஜி, அவரது தம்பி அசோக்குமாரை போலீசார் தேடி வருகின்றனர்.

எனவே த.வெ.க. ஆட்சியை கலைக்க குதிரை பேரம் நடத்துவதாக தி.மு.க. மீது த.வெ.க. வெளிப்படையாக குற்றம் சாட்டி வருகிறது.

ஆனால் தி.மு.க. எம்.எல். ஏ.க்களை விலைக்கு வாங்க த.வெ.க. அரசு முயற்சி செய்து வருவதாக தி.மு.க.வும் குற்றம் சுமத்தி இருக்கிறது. இது ஒருபுறம் இருக்க இது வரை அ.தி.மு.க.வில் இருந்து 6 எம்.எல். ஏ.க்கள் ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்துள்ளனர். இது அப்பட்டமான குதிரை பேரம் என்று அ.தி.மு.க. குற்றம் சுமத்தி வருகிறது.

இந்த சூழ்நிலையில் தமிழகத்தில் குதிரை பேர அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அமைச்சரவை கூட்டத்தில் 2 தனிநபர்கள் கலந்து கொண்டது குறித்து கவர்னர் விசாரிக்க வேண்டும் என்று நேற்று முன் தினம் ஒரே நாளில் எதிர்க்கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் பா.ஜனதா சார்பில் கவர்னர் ஆர்.வி.அர்லேகரிடம் மனு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், அனிதா ராதாகிருஷ்ணன் உதவியாளர்கள் பெயரில் பேரம் பேசியதாக ஸ்ரீவைகுண்டம் தவெக எம்.எல்.ஏ விஜி சரவணன் குற்றம்சாட்டி உள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்து திமுகவில் இணைந்தால் சுமார் ரூ.50 கோடி தருவதாக கூறினர். திமுகவில் வந்தால் அமைச்சர் பதவி தருவதாக பேரம் பேசினர். அனிதா ராதாகிருஷ்ணன் ஆட்கள் என்னிடம் பேரம் பேசினர். பேரத்துக்கு இணங்காவிட்டால் என்ன செய்வோம் என்று தெரியாது என மிரட்டினர். பதவியை ராஜினாமா செய்து திமுகவில் இணையும்படி என்னிடம் அக்கட்சியினர் பேரம் பேசினர். ஸ்ரீவைகுண்டத்தில் எனது வெற்றியால் அரசியல் காழ்ப்புணர்ச்சியால் திமுக, அதிமுக,பாஜகஇணைந்து சமூக வலைதளங்களில் அவதூறு பரப்புகின்றனர்.

தன்னிடம் பேரம் பேசியதாககூறப்படும்ஆடியோ ஒன்றையும் ஸ்ரீவைகுண்டம் தவெக எம்.எல்.ஏ விஜி சரவணன் வெளியிட்டார். ஏற்கனவே தவெக எம்.எல்.ஏ இளையராஜா அளித்த பேரம் புகாரில் சுமார் 10 பேர் கைதான நிலையில் புதிய புகார் ஒன்று வந்துள்ளது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பாரியூர் கொண்டத்து காளியம்மன் கோவில் மண்டபத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் பகுதிகளில் உள்ள ஒருகால பூஜை திருக்கோயில்களுக்கு பூஜை உபகரணங்களை கோவில் பூசாரிகள் மற்றும் அர்ச்சகர்களிடம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் வழங்கினார்

## சாலை போக்குவரத்து விழிப்புணர்வு கூட்டம்



திருப்பூர்: ஜூலை07

காலேஜ் ரோடு சிக்கண்ணா கல்லூரியில் திருப்பூர்மாநகரம்.வடக்கு தெற்கு பகுதியில்உள்ள300மாணவ மாணவிகள் ஆலோசனை கூட்டத்தில்கலந்தது கொண்டனர். காவல் உதவி ஆணையாளர் ஏ .சேகர் போக்குவரத்து பிரிவு, திருப்பூர் மாநகரம். சிக்கண்ணா கல்லூரி முதல்வர் Dr. வி. கிருஷ்ணன். போக்குவரத்து துணை தலைமை காப்பாளர் வாசுதேவன் காவல் உதவி ஆணையர் அ. சேகர் அவர்கள் பேசியது. நாம் தினசரி பயன்படுத்தும் சாலைகளில் பாதுகாப்பாக செல்வது பற்றியும், மாணவர்கள் அனைத்துப் போக்குவரத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியும், அவர்களுக்கு விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டது. மாணவர்களின் லட்சியங்கள், கொள்கைகள், கல்வி மூலம் தொழில்கள், வேலைவாய்ப்பு பெற்று, வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால், அதற்கு முதலில் நம் உடலில் உயிர் இருக்க வேண்டும் & நமது உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.★ உங்கள்கவனம் கல்வியில் மட்டும் இருக்கவேண்டும் என விளக்கப் பட்டது. மேலும் மாணவர்கள் எந்த வடிவிலும் போதை பொருளை வாங்கவோ, விற்கவோ & பயப்படுத்தவோ கூடாது. அதனால்நமக்கும்&நம்குடும்பத்திற்கும் ஏற்படும் தீமைகளை மாணவர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டது. நீங்கள் தான் இந்தியாவின் எதிர்காலம் என்றும் விரிவாக மாணவர்களுக்கு சொல்லப்பட்டது.★ இதில் 300 இருபால மாணவர்கள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் குறித்த விழிப்புணர்வு விளம்பர வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, தனி வட்டாட்சியர் பானுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### குலசேகரம் அருகே

## 100 வயதை கடந்த ராணுவ வீரர் 2ம் உலகப்போரில் வெற்றி பதக்கம் பெற்றவர்



மார்த்தாண்டம், ஜூலை 7

குலசேகரத்தை அடுத்த திருவரம்பு அருகே உள்ள செம்மண்தறை பகுதியை சேர்ந்தவர் வேதக்கண் (101). இரண்டாம் உலகப் போர் வீரர் 1925 ஜூலை 1 ல் பிறந்த இவர் ஜூலை 1 ல் தனது 101 வது பிறந்த நாளை மக்கள், பேரப்பிள்ளைகளுடன் கொண்டாடி மகிழ்ந்தார். இவருக்கு 2 மகன்கள், 5 பேரப்பிள்ளைகள், 9 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் உள்ளனர். தற்போது தனது முதல் மகன் தேவதாஸ் குடும்பத்துடன் வாழ்த்து வரும் இவர் இப்போதும் யாருடைய உதவியும் இல்லாமல் தனது வேலைகளை தானே செய்து வருகிறார். தான் 2ம் உலகப்போர் காலத்து ராணுவ வீரர் என்று அலட்டி கொள்ளாமல் எளிமையாக பழகும் இவர் இப்போதும் எந்தவித தடுமாற்றமும் இல்லாமல் கடந்த கால நிகழ்வுகளை நினைவு கூறுகிறார்.

குழந்தை பருவத்தில் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்த இவர் குடும்ப சூழ்நிலை காரணமாக படிப்பை தொடர முடியாமல் சிறு வயது முதல் விவசாய வேலைகளுக்கு சென்றுவிட்டார். ஆனால் அதில் கிடைக்கும் வருமானம் குடும்ப தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இல்லை. அந்த நேரத்தில் தான் விளைவித்த வாழை குலைகளை மார்த்தாண்டத்தில் உள்ள சந்தையில் விற்க செல்லுவது வழக்கம். ஒரு முறை சந்தைக்கு வாழை குலை விற்க சென்ற போது அங்கு அறிமுகமான நபர் ஒருவர் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்தால் நல்ல உணவு மற்றும் சம்பளம் கிடைக்கும் என்று கூறியுள்ளார். வேதக்கண் உடனடியாக சம்மதம் தெரிவித்து அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளார். இதற்காக திருவனந்தபுரத்தில் நடைபெற்றஉடல்தகுதிதேர்வு,நாகர்கோவில்நடைபெற்ற மருத்துவ பரிசோதனை போன்றவற்றில் தேர்ச்சி பெற்ற பின் 6 மாதம் பயிற்சிக்கு பின் தனது 19 வது வயதில் 1944 ல் பிரிட்டீஷ் ராணுவத்தில் சேர்ந்துள்ளார். இவருடன் அப்போது 32 பேர் ராணுவத்தில் சேர்ந்துள்ளனர்.

வேதக்கண் பிரிட்டிஷ் ராணுவத்தில் பயோனியர் படை பிரிவில் பணியில் சேர்க்கப்பட்டார். அப்போது 2ம் உலகப்போர் நடைபெற்ற காலம் என்பதால் பிரிட்டிஷ் ராணுவத்துக்காக சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற நாடுகளுக்கு சென்று போரிட்டுள்ளார். இப்போது உள்ள பாகிஸ்தான் பகுதியில் நடைபெற்ற பல்வேறு சண்டைகளில் பிரிட்டிஷ் ராணுவத்துக்காக போரிட்டுள்ளார்.பல இடங்களில்மயிரிழையில்உயிர்தப்பியுள்ளார்.

2ம் உலகப்போர் வெற்றிக்கு பின் பிரிட்டிஷ் ராணுவம் போரில் ஈடுபட்ட வேதக்கண் க்கு பதக்கம் வழங்கி சிறப்பித்துள்ளது. உலகப்போர் 1945 முடிந்தாலும் அங்காங்கே சில இடங்களில் சிறிய சண்டைகள் நடந்த வண்ணம் இருந்துள்ளது. இதிலும் வேதக்கண் கலந்து கொண்டுள்ளார்

1947ல் இந்தியா சுதந்திரம் பெற்றதும் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் ராணுவம் இந்திய ராணுவமாக மாற்றப்பட்டது. அதற்கு பின் பாகிஸ்தானுடன் போர் துவங்கியது. வேதக்கண் இப்போரில் கலந்து கொண்டு தொடர்ந்து பல நாட்கள் ஒரே இடத்தில் தங்கி போரில் ஈடுபட்டுள்ளார்.இதில்வேதக்கண்பலமுறைநூலிழையில் உயிர் தப்பியுள்ளார். அசாம் மாநிலத்தின் எல்லையில் காட்டுப்பகுதியில் போருக்கு சென்ற அனுபவம் இன்றும் பயத்தை ஏற்படுத்துகிறது என்று வேதக்கண் கடந்த கால நினைவுகளை கூறுகிறார். உலகப்போரில் எதிர்கொண்ட சவாலைவிட அதிகமாக இந்திய ராணுவத்தில் எதிர்கொள்ளும் நிலை உருவாக்கியதாகவும் வேதக்கண் கூறுகிறார்.

1953 ஆண்டு தேவைப்படுபவர்கள் தங்கள் சர்வீசை நிறைவு செய்து கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்ததையடுத்து ஒய்வு பெற்றுள்ளார்.

அதன் பின்னர் சொந்த ஊர் வந்து மீண்டும் விவசாய தொழிலில் ஈடுபட்டுள்ளார். அதற்குப் பின் ரஞ்சிதம் என்பவரை திருமணம் செய்துள்ளார். மனைவி ரஞ்சிதம் சில வருடங்களுக்கு முன் காலமானார். சர்வீசில் இருக்கும்போது இவருக்கு 18 ரூபாய் சம்பளம் கிடைத்துள்ளது. 101 வது பிறந்த நாளை கொண்டாடிய 2 ம் உலகப்போர் வீரரும் இந்திய ராணுவத்தின் தொடக்க கால வீரரான வேதக்கண்ணுக்கு முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் பலர் வாழ்த்துகளை தெரிவித்தனர்.



## ரோட்டரி கிளப் ஆஃப் அண்ணா நகர் மெட்ராஸ், ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் இணைந்து 27 பெண்களுக்கு "பிங்க்" ஆட்டோக்கள் வழங்கின

சென்னை, ஜூலை 7

சென்னை மாவட்டம் 3234 ரோட்டரி கிளப் ஆஃப் அண்ணா நகர் மெட்ராஸ், ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் மற்றும் "அநியு"அமைப்புடன் இணைந்து பெண்களுக்கு வாழ்வாதாரம் வழங்கும் எண்ணத்தில் 27 பிங்க் ஆட்டோக்களை இன்று அம்பத்தூரில் உள்ள "ஐமா" அரங்கில் வழங்கியது.

இந்த ஆட்டோக்கள் ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் நிதி உதவியுடன், "அநியூ" தொண்டு நிறுவனம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட 27 பெண் பயனாளிகளுக்கு ரோட்டரி கிளப் ஆஃப் அண்ணா நகர் மெட்ராஸ் மூலம் ஒருங்கிணைந்து வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் செயல் தலைவர் மற்றும் திரு ஆனந்தன், ரொட்டேரியன் பத்மா ஆனந்தன் தம்பதியர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மேலும் ரோட்டரி மாவட்டம் 3234 கவர்னர் ரொட்டேரியன் D. சுரேஷ் ஜெயின், "அநியூ' அமைப்பின் நிறுவனர் டாக்டர் அன்னலகட்சுமி ஆகியோர் முன்னிலை வகுத்தனர். ரோட்டரி கிளப் ஆஃப் அண்ணா நகர் மெட்ராஸ் தலைவி ரொட்டேரியன் மல்லிகா தியாகராஜன், செயலாளர் ரொட்டேரியன் சிங்காரவேல் கம்யூனிட்டி சர்வீஸ் டெவலப்மென்ட் டைரக்டர் ரொட்டேரியன் பாலசுந்தரம், அசிஸ்டெண்ட் கவர்னர் ரொட்டேரியன் தருன் அகர்வால்,

ஆப்டஸ் நிறுவன சமூக பொறுப்பு துறையின் பிரதிநிதிகள் திரு.தயாநிதி மற்றும் முரளி ஆகியோர் இந்நிகழ்வை ஒருங்கிணைந்து வழிநடத்தனர். மாவட்ட நிர்வாகிகள் கிளப் உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் திரளாகக் கலந்து கொண்டு இந்த சிறப்பான திட்டத்தைப் பாராட்டினர்.

## தமிழ்நாடு காவிரியின் உயிர் காக்க ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பும் போராட்டம்



கோவை ஜூலை:07

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே,தபால் அனுப்பும் போராட்டம் மறுமலர்ச்சி மக்கள் இயக்க தலைவர் ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.தமிழ் நாட்டின் காவிரி நதிநீர் உரிமை தற்போது மிகக் கடுமையான ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.இந்த அசாதாரண சூழ்நிலையில்,இந்திய அரசியல் சாசனத்தின் 143ஆம் பிரிவின்கீழ், காவிரி தொடர்பான முக்கிய சட்ட மற்றும் அரசியல் சாசனக் கேள்விகளை மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்காக அனுப்புமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம் என்று கூறினார்.

மேலும் 1991 ஆம் ஆண்டு ஜூன் 25 அன்று காவிரி நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது.அந்தத் தீர்ப்பை செயல்படுத்துவதைத் தவிர்க்கும் வகையில்,கர்நாடக அரசு அரசியல் சாசனத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு முரணான சட்டத்தை இயற்றியது.

அந்தச் சூழ்நிலையில்,அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் இந்திய அரசியல் சாசனத்தின் 143ஆம் பிரிவின்கீழ் 27.07.1991 அன்று உச்சநீதிமன்றத்திடம் கருத்துரை கோரினார்.அந்த நடவடிக்கை காவிரி விவகாரத்தில் மிக முக்கியமான சட்ட முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.அதன் அடிப்படையில்,உச்சநீதிமன்றம் காவிரி நடுவர் மன்றத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்தி, தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தீர்ப்பளித்தது என்று கூறினார்.

## கருணாநிதியின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# மாபெரும் மாட்டு வண்டிகள் பந்தயம்



விளாத்திகுளம் ஜூலை 07.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள மாமுநயினார்புரம் கிராமத்தைச் சேர்ந்த கலைஞர் கருணாநிதியின் தீவிர முரட்டு பக்தனான ராஜாக்கண்ணு என்பவர் பல ஆண்டுகளாக திமுக பிரமுகராகவும், தற்போது மாநில பொதுக்குழு உறுப்பினராகவும் உள்ளார் இவர் திமுக மற்றும் கலைஞர் கருணாநிதியின் மீது கொண்ட பற்றின் காரணமாக, கலைஞர் கருணாநிதியின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டும், ராஜாக்கண்ணு மகள் குருப்பிரியா வின் பூப்புனித நீராட்டு விழாவை முன்னிட்டு தனது சொந்த கிராமத்தில் மாபெரும் மாட்டு வண்டிகள் பந்தயம் நடத்தினார்.

பூஞ்சிட்டு, தேன்சிட்டு, என இரு பிரிவுகளாக நடைபெற்ற இந்த மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தில் தேனி,மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம்,திருநெல்வேலி,தூத்துக்குடி உள்ள தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 29 ஜோடி மாடுகள் போட்டியில் கலந்து கொண்டு சீறிப்பாய்ந்தன, போட்டியானது மாமுநயினார்புரம் கிராமத்திலிருந்து விளாத்திகுளம் சாலையில் நடைபெற்றது.

நடைபெற்ற மாட்டு வண்டிகள் பந்தயம் குறுகலான சாலை என்றாலும், சாரதிகள் மற்றும் பின்சாரதிகள் மாட்டு வண்டிகளை மிகவும் நேர்த்தியாக வெற்றி இலக்கை நோக்கி மாட்டு வண்டிகளை செலுத்தினர். அதனைத்தொடர்ந்து பந்தயத்தில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர் மற்றும் ஓட்டி வந்த சாரதிகளுக்கு விழா கமிட்டியின் சார்பாக பரிசுத்தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், தமிழக ஏர் உழவன் விவசாய சங்கத் தலைவர் ராஜேஷ் உள்ளிட்ட பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பூரில் சிவில் இன்ஜினியர் அசோசியேசன் சார்பில்

# 21வது கட்டுமான பொருட்கள் கண்காட்சி



திருப்பூர்ஜூலை:07

திருப்பூர் சிவில் இன்ஜினியர் அசோசியேசன் சார்பாக CONSTRO MEGA 26 என்ற தலைப்பிலான கட்டிட கட்டுமான பொருட்களின் கண்காட்சி வருகின்ற 10ம் தேதி திருப்பூர் தாராபுரம் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதற்கான செய்தியாளர் சந்திப்பு இன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய சிவில் இன்ஜினியர் அசோசியேசன் தலைவர் ஜனார்த்தனன் மற்றும் கண்காட்சி தலைவர் ராஜு, திருப்பூரில் 21ஆவது கட்டட கட்டுமான பொருட்கள் கண்காட்சி வரும் 10ம் தேதி தாராபுரம் சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் நடக்கிறது. இந்த கண்காட்சியில் தமிழக மற்றும் இந்தியாவில் உள்ள கட்டிட கட்டுமான பொருட்கள் தயாரிக்கும் சிறந்து விளங்கும் 200க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கிறார்கள் இதில் கட்டடங்களுக்கு தேவையான செலவுகளை குறைக்கக்கூடிய புதிய வகையான பொருட்கள் ஏராளமாக காட்சிப்படுத்தப்பட உள்ளது. பசுமை கட்டுமானம் சார்ந்த செங்கல் கம்பி சிமெண்ட் ரெடிமேட் கான்கிரீட் நிறுவனங்கள் மரம் மற்றும் மரம் சார்ந்த பொருட்கள் எலக்ட்ரிக்கல் சோலார் லாக்கர் பலவிதமான கண்ணாடி வகைகள் மற்றும் புதிய பெண் வகைகள் என பல முன்னணி நிறுவனங்கள் இந்த கண்காட்சியில் கலந்து கொள்கிறார்கள். பத்தாம் தேதி துவங்கும் இந்த கண்காட்சி ஆனது 13ஆம் தேதி வரை நான்கு நாட்கள் நடக்கிறது. இந்த கண்காட்சியில் சுமார் 40 ஆயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் 300 கோடிக்கும் அதிகமாக வர்த்தக விசாரணை நடக்கும் எனவும் 100 முதல் 120 கோடி வரை வர்த்தகம் நடைபெறும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர்...

## விளாத்திகுளத்தில் காவல்துறை சார்பில்

# தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் ஆலோசனை கூட்டம்



விளாத்திகுளம் ஜூலை07.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்கள் மற்றும் அலுவலர்களை அழைத்து விளாத்திகுளம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சுந்தரபாண்டியன் தலைமையில் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடு குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய காவல்துறை துணை கண்காணிப்பாளர் சுந்தரபாண்டியன் அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் இரவு காவலர் கண்டிப்பாக நியமிக்க வேண்டும், நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும் மற்றும் கேமரா பதிவுகளை தங்களுடைய மொபைல் போனில் கண்காணிக்க வழி வகை செய்து கொள்ள வேண்டும், தங்களுடைய சங்கங்களில் உள்ள பட்டா புத்தகத்தில் காவல்துறையினர் தினமும் வந்து கையொப்பம் செய்கிறார்களா என்பதை கண்காணித்து கையொப்பம் செய்யாவிட்டால் சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்.

இந்த நிகழ்வில் சூரங்குடி ஆய்வாளர் சுதாகர், உதவி ஆய்வாளர்கள் நாராயணன், செந்தில் வேல்முருகன், காவல்துறையினர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் என 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்டம்

# ஓமலூர் வட்டம் காடையாம்பட்டி கிராமத்தில் நிலம் அபகரிப்பு



சேலம், ஜூலை 7

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் காடையாம்பட்டி கிராமத்தில் வசித்து வருபவர் முனுசாமி. இவர் ஒரு மாற்றுத் திறனாளி ஆவார். இவருக்கு சொந்தமான 74 சென்ட் நிலத்தை அபகரித்து விட்டதாகவும், கிராம கணக்கில் பட்டா பெயர் மாற்றம் செய்து விட்டதாகவும் கூறி மேட்டூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 22.6.2026 அன்று மனு கொடுத்தும் மேற்படி கோட்டாட்சியர் அவர்கள் நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று கூறி இன்று 06.07.2026 ல் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வாயிலில் தனது மனைவியுடன் தீக்குளிக்க முயற்சித்தார். நீதிமன்றங்கள் தனக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியும் வருவாய் அதிகாரிகள் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறி சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வாயிலில் மண்ணெண்ணையை ஊற்றிக் கொண்டு கணவன் மனைவி இருவரும் தீ குளிக்க முயற்சித்தனர். அதன்பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பணியில் இருந்த காவலர்கள் அவர்களை மீட்டு திங்கட்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளிக்க அனுப்பி வைத்தனர்.



சென்னை மாநகரில் அழகிய கடலோரத்தில், திருவல்லிக்கேணி நடுக்குப்பத்தில் அமைந்துள்ள, அருள்மிகு ஸ்ரீ பயிண்டியம்மன் திருக்கோயில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிக்கும் அன்னையாக, அருள்மிகு பயிண்டியம்மன் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு பஞ்சவர்ணம் தீட்டப்பட்டு நிகழும் மங்களகரமான பராபர வருடம் ஆனி மாதம் 21 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று பஞ்சமி திதியும், சதயம் நட்சத்திரமும் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் மிதுன லக்னத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுற்று வட்டார பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்து அறநிலையத் துறைக்கு உட்பட்ட கோயில், செயல் அலுவலர் கார்த்திகேயன், ஆலய தலைவர் அன்பு குமார், செயலாளர் வெங்கடேசன், பொருளாளர் கரிகாலன் இவர்கள் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

# சேலத்தில் கந்து வட்டி கொடுமை



சேலம், ஜூலை 7

சேலம் மாவட்டம் ஏர்வாடி கிராமத்தை சேர்ந்த சந்திர சேகரன் என்பவர் அதே ஊரை சேர்ந்த இருவரிடம் ரூபாய் ஒரு இலட்சம் பணம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100க்கு 3 வட்டி வீதம் பணம் கடன் வாங்கியுள்ளார். அதனை சில மாதங்கள் கழித்து சரிவர வட்டி பணம் தரவில்லை என்று கூறி ரூபாய் 100 க்கு 8 வட்டி வீதம் மீட்டர் வட்டியாக மாற்றி கேட்டதாகவும் அதற்கு அடுத்த மாதம் நூற்றுக்கு 15 ரூபாய் என்று மீட்டர் வட்டிக்கு மாற்றி விட்டதாகவும் பணம் கொடுக்கவில்லை என்றால் உன்னை அவமானப் படுத்தி விடுவேன் என்று மிரட்டினார். இதனால் அவர் கேட்ட தொகையை சந்திரசேகரன் (மனுதாரர்) கட்டிக் கொண்டிருந்ததாகவும் அதன் பிறகு வீட்டிற்கு வந்து மனைவி, மகன் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் அவரை அவமரியாதையாகவும், விரும்பத் தகாத அசிங்கமான வார்த்தைகளாலும் திட்டியதால் அவரது ஆறு சக்கர வாகனத்தை வலுக்கட்டாயமாக பறிமுதல் செய்து சென்று விட்டதாகவும் அதன் பிறகு அந்த வாகனத்தை விற்று வட்டிக்கு பணம் கொடுத்தவர்களிடம் பணம் கொடுத்ததாகவும் இதுவரை தான் 6,07,000/= பணம் செலுத்தி உள்ள நிலையிலும் கொலைசெய்து விடுவதாக என்னை மிரட்டி வரும் அவர்கள் மீது கந்துவட்டி கொடுமை சட்டப்படி குற்ற நடவடிக்கை எடுக்குமாறு மல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை என்று கூறி இன்று சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற திங்கட்கிழமை பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளித்தார்.

# புதுக்கடை அருகே பட்டதாரி பெண் மாயம்; தந்தை புகார்

புதுக்கடை, ஜூலை. 7

புதுக்கடை அருகே உள்ள காப்புக்காடு பகுதியை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவர் கொத்தனார் வேலை செய்கிறார். இவருக்கு மனைவியும் 2 மகள்களும் உண்டு. மூத்த மகள் சரண்யா (24) முதுகலை பட்டதாரி. சம்பவ தினம் சரண்யாவின் பெற்றோர் வெளியில் சென்றனர். சரண்யா மட்டும் வீட்டில் இருந்தார். பின்னர் பெற்றோர் வந்து பார்த்த போது மகள் திடீரென மாயமானார். இதை தொடர்ந்து பெற்றோர் சரண்யாவை உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தேடிப் பார்த்தனர். ஆனால் அவர் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதை அடுத்து மகள் மாயமானது குறித்து தந்தை ராஜேந்திரன் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். புகாரில் வீட்டருகே உள்ள அஜித் என்பவருடன் மகள் மாயமானதாக கூறியுள்ளார். புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான சரண்யாவை தேடி வருகிறார்கள்.

# புதுக்கடை அருகே 26 மது பாட்டில்களுடன் கூலி தொழிலாளி கைது

புதுக்கடை, ஜூலை.7

புதுக்கடை அருகே உள்ள கீழ்குளம் சந்திப்பு பகுதியில் சட்டவிரோதமாக மது விற்பனை நடைபெறுவதாக புதுக்கடை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து புதுக்கடை சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் தலைமையிலான போலீசார் அந்த பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது ஒரு நபர் பைக் ஒன்றில் ஒரு பையில் மது பாட்டில்களுடன் விற்பனை செய்து கொண்டிருப்பதை கண்டுபிடித்து, அவரது வாகனத்தை தடுத்து நிறுத்தினர். ஆனால் அவர் தப்பி செல்ல முயன்றார். போலீசார் மடக்கி பிடித்து, கையில் இருந்த பையை சோதனை செய்தபோது அதில் 180 மில்லி கொள்ளளவு கொண்ட 26 மது பாட்டில்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக மதுபாட்டில்கள் மற்றும் வாகனத்தை பறிமுதல் செய்து புதுக்கடை போலீஸ் நிலையம் கொண்டு வந்து விசாரித்தனர். விசாரணையில் அவர் தேங்காப்பட்டணம் அருகே உள்ள சரல்விளை பகுதியை சேர்ந்த ரசல்ராஜ் (61)என்ற கூலி தொழிலாளி என்பது தெரிய வந்தது. அரசு அனுமதியின்றி மதுவை விற்பனை செய்ய கொண்டு சென்றதும் தெரிய வந்தது. புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட மது பாட்டில்களின் மொத்த மதிப்பு ரூ.3640 ஆகும்.

## தென்காசியில்

# வி தி லீடர் அமைப்பின் கரு.நாகராஜன் பேட்டி



தென்காசி, ஜூலை.7

தமிழ்நாடு பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கடந்த மாதம் we the leadar என்கின்ற மக்கள் இயக்கத்தை தொடங்கினார். அந்த அமைப்பில் 19 லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்துள்ள நிலையில் தமிழ்நாடு முழுவதும் மாவட்டங்கள் வாரியாக உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

இதேபோன்று தென்காசி மாவட்டத்தை சேர்ந்த மக்கள் இயக்கத்திற்கான உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி நகரின் மங்கம்மா சாலையில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அமைப்பின் முக்கிய நிர்வாகியான கரு.நாகராஜன் பங்கேற்று உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் கரு.நாகராஜன் தெரிவித்ததாவது

We The leadar மக்கள் இயக்கத்தை 3 வாரங்களுக்கு முன்பு அமைத்தார். தமிழ்நாட்டில் மக்கள் மனதில் இடம் பிடித்து 19 லட்சம் உறுப்பினர்களை கொண்ட அமைப்பு.

அண்ணாமலை மீது மக்கள் எப்படிபட்ட நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது. மக்கள் சுய விருப்பத்தோடு இணைந்து இருக்கிறார்கள். சேருபவர்கள் ஆண்ட்ராய்டு போன் வைத்திருக்க வேண்டும் என்ற நிலை

இதை எளிமை படுத்தும் வகையில் மிஸ்டு கால்டு முறையில் பதிவு செய்யும் வகையில் மாற்றுத் திட்டத்தை தலைவர் அறிவிப்பார்.

இங்கு வந்து இருப்பவர் ஒரு கட்சியை சார்ந்தவர்களோ, ஒரு பிரிவை சேர்ந்தவர்களோ இல்லை அனைத்து தரப்பு அரசியல் கட்சியினர் சமூக அமைப்பினர் என அனைத்து தரப்பு மக்களும் இருக்கிறார்கள்.

உறுப்பினர்களை உற்சாகப்படுத்தும் நோக்கத்தில் இந்த ஆலோசனை கூட்டம் மாவட்டங்கள் தோறும் நடத்தப்படுகிறது.

பொள்ளாச்சியில் வருகிற 12ம் தேதி மக்களை அண்ணாமலை சந்திக்கும் வகையில் கூட்டம் நடத்தப்படுகிறது.

திருச்செந்தூரில் வருகிற 26ம் தேதி பொதுக்கூட்டம். செப்டம்பர் மாதம் கன்னியாகுமரியில் கூட்டம். வருகிற

ஆகஸ்ட் 16 சென்னையில் மிகப்பெரிய மாரத்தான் ஓட்டம் அண்ணாமலை தலைமையில் நடக்கிறது. இந்த அமைப்பு பொதுமக்களிடம் விழிப்புணர்வு மக்களுக்கு சேவை செய்யும் வகையில் செயல்படும்.

விரைவில் அரசியல் அமைப்புகளாக மாறும். தமிழகத்தில் மிகப்பெரிய அரசியல் கட்சியாக மாறுவதற்கு இது போன்ற ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது.

50 லட்சம் உறுப்பினர் சேர்ந்த பிறகு அரசியல் கட்சியாக மாற்றப்படும்.

இடைத்தேர்தல் பற்றி நமக்குத் தெரியாது இடைத்தேர்தல் தமிழகத்தில் நடைபெறுமா எனத் தெரியவில்லை

நாங்கள் இடைத்தேர்தலில் நிற்கப் போவதில்லை. நமது இயக்கத்தின் சார்பில் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட 66 ஆயிரம் பேர் பதிவு செய்த நிலையில் இப்போது 78 ஆயிரம் பேர் பதிவு செய்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 1,31,400 உள்ளாட்சி அமைப்புகளுக்கு போட்டியிட we the leadar அமைப்பு தயாராக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் மக்களுக்காக பாடுபட 42 வயதில் ஒரு தலைவர் இருக்கிறார் என்றால் அது அண்ணாமலை தான். முதல்வர் விஜய் 52 வயது. உதயநிதி ஸ்டாலினுக்கு 55 வயது இவர்கள் இளைஞர்களா.

அனைத்து மக்களையும் விரைவில் அண்ணாமலை சந்திப்பார்.தவெக ஆட்சியில்

50 நாட்களில் நல்லதும் நடந்த இருக்கு தவறும் நடந்து இருக்கு. வெள்ளை அறிக்கை ஏன் வெளியிடப்பட்டது என்பது தெரியவில்லை மக்கள் வெள்ளை அறிக்கையை கேட்கவில்லை அறிவித்த திட்டம் எங்கே என்று கேட்கிறார்கள்.

பாலியல் மற்றும் படுகொலை 50 நாளை விட அதிகமாக நடந்து இருக்கிறது.

அமைச்சரே போதை பொருள் குற்றச்சாட்டுக்கு ஆளாகி வருகிறார். குற்றச்சாட்டு எழுகிறது என்றால் அவரை பதவி நீக்கம் செய்வது தவறு இல்லை

இவ்வாறு அவர் கூறினார். ஆலோசனைக் கூட்டத்தில் நிகழ்ச்சி அமைப்பாளர் டாக்டர் அன்புராஜ், யோகா டவர் சேகர், ஆறுமுகம் என்ற முருகேசன், நாகராஜ்,ராஜசேகர பாண்டியன் ,கந்தசாமி, முத்துக்குமரன், மாடசாமி, முருகன், முத்துச் செல்வன் மற்றும் 500க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் உழவர் தின பேரணி



கிருஷ்ணகிரி, ஜூலை 7

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் இரமகவுண்டர் தலைமையில் கிருஷ்ணகிரி பழையப் பேட்டை, காந்தி சிலை அருகில் இருந்து துவங்கிய இந்தப் பேரணியை விவசாயி சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் பீ.ஆர்.பாண்டியன் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

நகரின் பல்வேறு முக்கிய பகுதிகள் வழியாக சென்ற இப்பேரணியானது , கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் நடைப்பெற்ற பொதுக்கூட்டத்தில் நிறைவடைந்தது.


இதனைத் தொடர்ந்து உழவர் தின பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் அனுமந்தராசு வரவேற்புரை ஆற்றினார். மாநில செயலாளர் சத்தியமூர்த்தி, மேற்கு மாவட்ட பொருளாளர் சுப்ரமணிய ரெட்டி, , மா நர்சரி உரிமையாளர் சங்கத்தின் மாவட்ட ஆலோசகர் கன்னையன் ,மாவட்ட துணைத்தலைவர் வேலு மாவட்ட , துணைச்தலைவர் வரத ராஜன் தலைமாவட்ட பொருளாளர் அசோக் குமார் ,மாவட்ட துணை செயலாளர் சீனிவாசன், செயலாளர் சக்திவேல் , மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் சத்திவேல், மாவட்ட இளைஞர் அணி தணைச் செயலாளர் ரஞ்சித் குமார், மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்த ராஜ் ஒன்றிய தலைவர் தேவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இந்த பொதுக்கூட்டத்திற்கு விவசாயிகள் சங்கத்தின் ஒருங்கினைப்பு குழுத் தலைவர் பி.ஆர்.பாண்டியன் தென்னிந்திய விவசாய சங்கத்தின் தலைவர் நரசிம்மநாயுடு, கர்நாடக மாநிலத்தின் தலைவர் குறும்பூர் சாந்தகுமார், மற்றும் மாநில தலைவர்களான ஊட்டி மஞ்சல் மோகன் நாமக்கல் மாநில தலைவர் சுப்பிரமணியன், கோவை மாநிலத்தலைவர் பாபு, சத்தியமங்கலம் மாநில செயலாளர் வேலுமணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நரசிம்மன் ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்களை எடுத்துக்கூறி சிறப்பாக உரையாற்றினார்கள்.

தமிழகத்திலும் வழங்கப்பட வேண்டும், மத்திய அரசு நெல்லுக்கு உண்டான ஆதார விலையாக கிலோ ஒன்றுக்கு ரூபாய் 50 வழங்க வேண்டும், தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் வழியாக வாகனங்களும் எடுத்து செல்லும் விளைப் பொருள்களுக்கு தண்டம் வசூல் செய்யக் கூடாது.உயர்ந்துவரும் விலைவாசிகளுக்கு ஏற்ப பால் கொள்முதல் விலையை உயரத்தி வழங்கபட வேண்டும் உள்ளிட்ட 28 அம்சக் கோரிக்கைகள்

நிறைவேற்றப்பட்டது இந்த பேரணியில் சுமார் 2000 க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சில்வார்பட்டி ஊராட்சி பகுதியில்

# நூறு நாள் வேலைத் திட்டத்தில் வைக்கப்பட்ட மரக்கன்றுகள் பராமரிப்பின்றி நாசம்



பெரியகுளம், ஜூலை 7

தேனி மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சில்வார்பட்டி ஊராட்சி பகுதியில் சில மாதங்களுக்கு முன்னர் அப்பகுதிகளில் முக்கிய சாலைகளில் இருபுறமும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் (விபி ஜி ராம் ஜி) மூலம் ஆயிரக்கணக்கில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அதன்பின்னர் அந்த மரக்கன்றுகளை சுற்றி பாதுகாப்பு வேலிகள் அமைத்தும், தண்ணீர் ஊற்றியும் பராமரிப்பு செய்யாததால் மரக்கன்றுகள் அனைத்தும் கருகி நாசமாகின. ஊராட்சியின் அலட்சிய போக்கால் பல லட்சம் அரசு பணம் விணடிக்கப்பட்டுள்ளன. எனவே இது சம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் தலையிட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் இதுபோன்ற பணிகளில் வட்டார வளர்ச்சி அலுவலர் தனி கவனம் செலுத்தி ஊராட்சி பகுதியை பசுமை பகுதியாக மாற்றும் சூழலை உருவாக்க வேண்டும் எனவும் கண்துடைப்பிற்காக செய்யப்படும் இது போன்ற பணிகளால் எவ்வித பலனும் இல்லை என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்ததோடு சில்வார்பட்டி ஊராட்சி பகுதிகளில் 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக்கன்றுகளை முறையாக பராமரிப்பு செய்யாமல் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள சில்வார்பட்டி ஊராட்சி நிர்வாகத்தின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கோரிக்கை எழுந்துள்ளது.

# போஸ்டர் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரி உண்ணாவிரத போராட்டம்



மதுரை, ஜூலை 7

மதுரையில் நாளுக்கு நாள் போஸ்டர் மற்றும் கலாச்சாரம் அதிகரித்து வரும் நிலையில் போஸ்டர் ஒட்டுவதற்கு ஒரு சில தரப்பினர் எதிர்ப்புகளை தெரிவித்து வருகிறனர், மேலும் மாநகராட்சியும் மாவட்ட நிர்வாகமும் நகரில் ஆங்காங்கே ஒட்டப்பட்டு இருக்கும் போஸ்டர்களை கிழித்தும் வருகின்றனர், மேலும் இந்த போஸ்டர் ஒட்டும் தொழிலில் பெரும்பாலான தொழிலாளர்கள் இதனை வாழ்வாதரமாக நம்பி உள்ளனர், எனவே மதுரையில் போஸ்டர் ஒட்டும் தொழிலை முறைப்படுத்த புதிய வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்க வேண்டும் இதுபோல் மாநிலம் முழுவதும் வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்க வேண்டும் போஸ்டர் ஒட்டும் தொழிலாளர்களை வாழ விட வேண்டும் பணி நேர விபத்துகளுக்கான அரசு காப்பீட்டு திட்டம் அமல்படுத்தப்பட வேண்டும் தேவையற்ற காவல்துறை நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் தமிழ்நாடு விளம்பர பணியாளர்களுக்கு என தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டும்இரவு நேர பணிகளுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு ஜாக்கெட் வழங்கப்பட வேண்டும் சட்டபூர்வமாக போஸ்டர் ஒட்டும் நடைமுறைகள் குறித்து அரசு பயிற்சி அளிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மதுரை பழங்காநத்தம் பகுதியில் தமிழ்நாடு விளம்பர பணியாளர்கள் சங்கம் சார்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்கத் தலைவர் போஸ்டர் முத்துச்சாமி தலைமை வகித்தார் ரைட்சுரேஷ் பாலமுருகன் கலைச்சந்திரன் சுல்தான் நாகூர் மீரான் பாலாஜி, செல்வம் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர் முத்துக்கண்ணன் ஸ்ரீதர் கணேசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் கண்ணன் குமார் உண்ணாவிரத போராட்டத்தை துவக்கி வைத்தார் மேலும் இந்நிகழ்வில் அண்ணாதுரை கருப்பு ரவி உட்பட போஸ்டர் ஒட்டும் தொழிலாளர்கள் தமிழ்நாடு விளம்பர பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்

# விளவங்கோடு காங்கிரஸ் எம் எல் ஏ பிரவீன் உட்பட 16 பேர் மீது கேரளா போலீஸ் வழக்கு பதிவு



மார்த்தாண்டம் ஜூலை 7

விளவங்கோடு காங்கிரஸ் எம் எல் ஏ டி.டி. பிரவீன், முன்னாள் பிஷப் தர்மராஜ் ரசாலம் உள்ளிட்ட 16 பேர் மீது திருவனந்தபுரம் மியூசியம் போலீஸ் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கேரளா சி.எஸ்.ஐயின் தெற்கு கேரளா மகா திருச்சபை தலைமையகம் திருவனந்தபுரத்தில் உள்ள பாளையம் பகுதியில் உள்ளது. இங்குள்ள எம்.எம். தேவாலயத்தில் கடந்த 2022ம் ஆண்டு ஏப்ரல் 29ம் தேதி ஆலய பூட்டை உடைத்து அத்துமீறி நுழைந்து மற்றும் வன்முறையில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. அப்பொழுது சம்பந்தப்பட்டவர்கள் போலீஸ் ஸ்டேஷன் புகார் தெரிவித்தனர்

இந்த விவகாரத்தில் கோர்ட் தலையீட்டைத் தொடர்ந்து சுமார் 4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முன்னாள் பிஷப் தர்மராஜ் ரசாலம், விளவங்கோடு எம்.எல்.ஏ. பிரவீன், நிபு ஜேக்கப் வர்க்கி, ரசலையன், சதேஷ் குமார் உள்ளிட்ட மொத்தம் 16 பேர் குற்றம் சாட்டப் பட்டுள்ளனர்.

## தருமபுரி அரசு கலைக் கல்லூரியில்

# முதலாம் ஆண்டு பயிலும் மாணவ மாணவிகளுக்கு அறிமுக பயிற்சி வகுப்பு



தருமபுரி ஜூலை 07

தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் உயர்கல்வித்துறை வழிகாட்டுதலின்படி 2026-2027 ம் கல்வி ஆண்டில் முதலாம்ஆண்டுசேர்க்கைபெற்றமாணவ,மாணவிகளுக்கு ஒரு வார கால அறிமுக பயிற்சி 01072026 முதல் நடைபெற்று வருகிறது . அதில் ஒரு பகுதியாக தருமபுரி மாவட்ட காவல்துறை சிங்கப்பெண் பிரிவு உதவி ஆய்வாளர் S. கிருஷ்ணவேணி தலைமையிலான சிங்கப்பெண் குழு மாணவ, மாணவிகளுக்கு பெண் குழந்தைகள் பாதுகாப்பு ,பெண்களுக்கான சட்ட உரிமைகள், போக்சோ சட்டம் பற்றிய விழிப்புணர்வு , ஆபத்துக் காலங்களில் குழந்தைகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு உரை நிகழ்த்தினார். கல்லூரியின்முதல்வர்முனைவர்கோ. கண்ணன் தலைமை தாங்கினார். மேலும் அதனைத் தொடர்ந்து சமூக செயல்பாட்டாளர், தமிழ் ஆர்வலர், தன்னம்பிக்கை பேச்சாளர் , தகடூர் ப. அறிவொளி மாணவர்களுக்கு தன்னம்பிக்கை உரை நிகழ்த்தினார். கல்லூரி உள் புகார் குழு ஒருங்கிணைப்பாளர் ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர்சத்யாவழிகாட்டுதல்உரையும்,மாணவர்களின் கல்வி உதவித்தொகை, மற்றும் ஒழுக்கம் சார்ந்த நடைமுறைகள் குறித்து வேதியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் இரா. கிருபாகரன் ,புதுமைப்பெண் திட்டம் குறித்து கணினி அறிவியல் துறை பேராசிரியர் முனைவர் ஸ்ரீதர், (UMIS )பல்கலைக்கழக மேலாண்மை தகவல் அமைப்பு குறித்து முனைவர் பி. கௌதம் திருமால்ராயன் , மாணவ, மாணவிகளுக்கு எடுத்துரைத்தனர். பேராசிரியர்கள் முனைவர் விஜயா தாமோதரன்,முனைவர்பி.வி.சாரதி ஆகியோர்முன்னிலை வகித்தனர்.அறிமுகபயிற்சிவகுப்பின்ஒருங்கிணைப்பாளர் தாவரவியல் துறை இணை பேராசிரியர் முனைவர் கோ. பிரபாகரன், இணை ஒருங்கிணைப்பாளர்கள் தமிழ் துறை இணைப் பேராசிரியர் முனைவர் கு. சிவப்பிரகாசம், உடற்கல்வி இயக்குனர் முனைவர் கு. பாலமுருகன் ஆகியோர் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தினர். இந்த அறிமுக பயிற்சி வகுப்புகள் 09 07 2026 வரை நடைபெற உள்ளது .இந்த நிகழ்ச்சியில் முதலாம் ஆண்டு சேர்க்கை பெற்ற 1,300 மாணவ , மாணவிகள் பங்கேற்றனர்.

# சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்கள் மோதல் 6 பேர் படுகாயம்; போலீஸ் குவிப்பு



கன்னியாகுமரி, ஜூலை. 7

கன்னியாகுமரி சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்தை தளமாக கொண்டு சுமார் 350 மீன்பிடி விசைப்படகுகள் உள்ளன. இதில் சுமார் 270 விசைப்படகுகள் கன்னியாகுமரி பகுதியை சேர்ந்தது ஆகும். மற்ற படகுகள் சின்ன முட்டம் பகுதி சேர்ந்தவை. ஒவ்வொரு நாளும் அதிகாலை 5 மணிக்கு விசைப்படகுகள் கடலுக்கு செல்ல வேண்டும். இரவு 9 மணிக்குள் கரை திரும்ப வேண்டும். இந்த நேர கட்டுப்பாட்டை மீறி சென்றால் விசைப்படகு உரிமத்தை ரத்து செய்து நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து ஏற்கனவே மீன்வளத் துறை சார்பில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களாக சின்ன முட்டம் மீன்பிடித் துறைமுக நுழைவு வாயில் பகுதியில் விசைப்படகுகள் சென்று வர அனுமதிப்பதற்காக வழிப்பாதையில் கட்டப்பட்டுள்ள ராட்சத கயிறு அறுந்தது. இதனால் எந்த நேரத்திலும் விசைப்படகு உள்ளே வந்து விட்டு வெளியே செல்லும் நிலை ஏற்பட்டது. நுழைவுப்பகுதியில்கயிறு அறுந்து அடைப்புகள் நீங்கியது தெரிந்ததும் மீன்வளத் துறை அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதை பயன்படுத்தி கடந்த 4ம் தேதி குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே சில விசைப்படகுகள் கடலுக்கு சென்றதாக கூறப்படுகிறது. அவர்களுக்கு அதிக அளவில் மீன்களும் கிடைத்துள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் விசைப்படகுகள் கடலுக்கு செல்லவில்லை. இந்த நிலையில் நேற்று திங்கள் அதிகாலை சுமார் 2 மணியளவில் 8 விசைப்படகுகள் நேர கட்டுப்பாட்டை மீறி கடலுக்கு மீன் பிடிக்க சென்றுள்ளன. இது குறித்தது தகவல் கிடைத்ததும் மீன்வளத்துறை அதிகாரிகள், கடலோர காவல் படையினர் சம்பவ பகுதிக்கு வந்து சின்ன முட்டம் மீன்பிடித்துறைமுக நுழைவாயில் பகுதியில் லாக் செய்தனர்.

இதனால் மற்ற விசைப்படகுகள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதிகாலை சுமார் 5 மணியளவில் புறப்பட இருந்த விசைப்படகுகள் செல்ல முடியாதால் மீனவர்களுடைய கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் கன்னியாகுமரியை சேர்ந்த மீனவர்கள் அங்கு திரண்டு, சின்ன முட்டத்தைச் சேர்ந்த விசைப்படகுகள் தான் நேரக் கட்டுப்பாட்டை மீறி சென்றுள்ளன. எங்களை ஏன் தடுக்கிறீர்கள் என கேட்டு மீன் வளத்துறை அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்து, துறைமுக நுழைவு பகுதியில் உள்ள மீன் வளத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அப்போது கன்னியாகுமரி மற்றும் சின்ன முட்டத்தை சேர்ந்த மீனவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டு, கோஷ்டி மோதல் வெடித்தது. மாறி மாறி இரு தரப்பினரும் தாக்க தொடங்கினார். தொடர்ந்து கற்கள் வீசியதில் சின்ன முட்டம் பகுதியில் உள்ள சில வீடுகளில் கண்ணாடிகளும் உடைந்தன.

சம்பவம் குறித்து அறிந்ததும் கன்னியாகுமரி டிஎஸ்பி ஜெயச்சந்திரன் தலைமையில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். போலீசார் குவிக்கப்பட்டனர். மாவட்ட எஸ்பி ஸ்டாலின் விரைந்து சென்று மீனவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். நேரம் செல்ல பதட்டம் அதிகரித்தது. கூடுதல் போலீசார் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

திருநெல்வேலியில் இருந்து டிஐஜி திருநாவுக்கரசும் உடனடியாக சின்ன முட்டம் வந்து மீனவர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். துறைமுகத்தில் விசைப்படகு நுழைவு பகுதியில் ராட்சத கயிறு சேதம் அடைந்து இருந்தது தெரிந்ததும், மீன்வளத்துறை அதிகாரிகள் அலட்சியத்தால் நேரக்கட்டுப்பாட்டை மீறி விசைப்படகுகள் சென்றுள்ளதாக மீனவர்கள் குற்றம் சாட்டினர். முதற்கட்டமாக ஆறு பேர் இந்த சம்பவத்தில் காயமடைந்ததாக கூறப்படுகிறது. அவர்கள் கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்றது.

# திருப்பத்தூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம்



திருப்பத்தூர்:ஜூலை:7

மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து 543 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் ரவிகுமார் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து,மக்கள்குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.55 இலட்சம் மதிப்பிலானஅரசுநலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

மக்கள் குறை தீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முதன்மைதிட்டமான உங்கள்தொகுதியில்முதலமைச்சர்திட்டத்தின் கீழ் வரபெற்ற மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் என அனைத்துத்துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் உத்தரவிட்டார். மேலும் வருவாய் துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத்துறை, நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சி, வனத்துறை, நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, கூட்டுறவு கடனுதவி, தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் சார்பாக வீடுகள் வேண்டி, மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்திட்ட உதவிகள், மருத்துவத்துறை, கிராம பொதுப்பிரச்சனைகள், குடிநீர் வசதி மற்றும் பொது நலன் குறித்த மனுக்கள் என மொத்தம் 543 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வாங்கி மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு, தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இதனைத்தொடர்ந்து, மக்கள்குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின்சார்பில், 06 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.3,136/ மதிப்பிலான கண்ணாடி, பிரெய்லி கடிகாரம், ஊன்று கோலும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.7,216/மதிப்பிலான சிறப்பு சக்கர நாற்காலியும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.1,05,000/ மதிப்பிலான பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலியும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ. 14,500/மதிப்பிலான கைத்திறன் பேசியும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.11,445/ மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிளும் என மொத்தம் 10 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 56 ஆயிரத்து 977/மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் ரவிகுமார் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள தமிழாசி, கூட்டுறவு சங்கங்களின் மண்டலஇணைப்பதிவாளர்தமிழ்நங்கை, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (தெற்கு) திரு.மகாதேவன், (வடக்கு) முருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தணிகாசலம், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், மாவட்ட வழங்கல் அலுவலர் சீனிவாசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.



தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் புலிக்கரையில் நபார்டு திட்டத்தின் புதிய கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து அலுவலர்களிடம்கேட்டறிந்நார்.இந்த ஆய்வின்போது நீர்வளத்துறைசெயற்பொறியாளர் செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் கணேஷ், உதவி பொறியாளர்கள் சாம்ராஜ், கல்யாண சுந்தரம் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆயத்தப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் குருச்சந்திரன் உடன் உள்ளார்

## தருமபுரியில்

# தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தின விவசாயிகள் மாநில மாநாடு பேரணி



தருமபுரி ஜூலை 07

தருமபுரி மாவட்ட தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தின விவசாயிகள் மாநில மாநாடு பேரணி மாநிலத் தலைவர் சின்னசாமி தலைமையில் நடைபெற்றது.

மாநில மாநாட்டில் சேலம், கிருஷ்ணகிரி, திருச்சி, மதுரை போன்ற தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான விவசாய சங்கத்தினர் பேரணியில் கலந்து கொண்டனர். இந்த பேரணி தருமபுரி ராமக்காள் ஏரிகரை அருகில் இருந்து ராஜா பேட்டை வரை பேரணியாக சென்றனர்.

இந்த பேரணியில் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி காவிரி படுகையின் 12 மாவட்டங்களில் வேளாண்மை தொழிலுக்கும் பேரழிவும் 22 மாவட்டங்களுக்கு குடிநீர் ஆதாரமும் பாதிக்கப்பட்டு பாலைவனம் ஆகிறது. ஜல்லிக்கட்டை மீட்டு எடுத்தோம், காவிரி தண்ணீர் உரிமையை மீட்க வேண்டாமா, மேகதாது அணை கட்டதிட்ட அறிக்கை தயாரிக்க அனுமதித்த உச்சநீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து அடுத்து வரக்கூடிய தலைமுறைகளுக்காக ஜல்லிக்கட்டு போராட்டம் போல் ஒன்றிணைந்து போராட வேண்டும். விவசாயிகளின் கூட்டுறவு பயிர் கடன் முழுமையாக தள்ளுபடி, கரும்புக்கு டன்னுக்கு ரூபாய் 4,500, பாலுக்கு கொள்முதல் விலை லிட்டருக்கு ரூபாய் 50 உயர்த்தி வழங்க வேண்டும்.

உரம்விலைகுறைப்பு,நிதிநீர்இணைப்பு, மேகதாது அணை கட்ட முயலும் கர்நாடகா அரசின் நடவடிக்கையை கண்டித்தும், காவிரி உபரி நீரை தருமபுரி மாவட்ட ஏரிகளுக்கு நிரப்பும் திட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஈச்சம்பாடி அணையிலிருந்து பம்பு மூலம் 40 ஏரிகளுக்கு நீர் நிரப்பும் திட்டம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பதாகைகள் ஏந்தி கொண்டும் கோஷம் எழுப்பிக் கொண்டும் பேரணியாகச் சென்றனர். இந்த பேரணியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர் இறுதியில் குப்புசாமி நன்றி கூறினார்.

# மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலக வளாகம்: அமைச்சர் நேரில் ஆய்வு




நாகர்கோவில், ஜூலை.7

மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகம் முளகுமூடு பகுதியில் இயங்கி வருகிறது. இந்த அலுவலக வளாகத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்யும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தாரகை கத்பர்ட் முன்னிலை வகித்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்:

கணினிமயமாக்கப்பட்ட தானியங்கி சேவையானது கடந்த 22.06.2026 முதல் மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகம் உள்ளிட்ட தமிழ்நாட்டிற்குட்பட்ட 10 வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக வாகன ஓட்டுநர் உரிமம் பெற வரும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்கள் இருப்பதாக மாவட்ட நிர்வாகத்திடமும், என்னிடத்திலும், குளச்சல் சட்டமன்ற உறுப்பினரிடமும் கோரிக்கை வைத்துள்ளார்கள். மக்கள் முன்வைத்த அனைத்து கோரிக்கையினையும் போக்குவரத்து துறை ஆணையர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் கல்குளம் வட்டாட்சியர் ராஜேஷ், துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# காதல் திருமணம்: சினிமா பாணியில் பெண்ணை கடத்திய உறவினர்கள்



திருச்சி, ஜூலை 7

திருச்சி மாவட்டம் சித்தானந்தம் பகுதியைச் சேர்ந்த அஜித்குமார் மற்றும் மருங்காபுரி ஒன்றியம் முடுக்குப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சித்திரவள்ளி ஆகியோர் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டனர். திருமணத்திற்குப் பிறகு இருவரும் ஒன்றாக வசித்து வந்த நிலையில், மணப்பாறைக்கு வந்த அவர்கள், பின்னர் ஆட்டோவில் சித்தானந்தம் நோக்கி சென்றுக் கொண்டிருந்தனர்.

அப்போது திருச்சி–திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் பாலப்பட்டி பிரிவு அருகே உள்ள பெட்ரோல் பங்க் பகுதியில், சித்திரைவள்ளியின் தந்தை மலையாண்டி மற்றும் அவரது உறவினர்கள் இரண்டு கார்களில் காத்திருந்ததாக கூறப்படுகிறது. அவர்கள் ஆட்டோவை வழிமறித்து நிறுத்தி, சித்திரவள்ளியை வலுக்கட்டாயமாக காரில் ஏற்றினர்.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த கணவர் அஜித்குமார், தனது மனைவியை காப்பாற்றுவதற்காக கடுமையாக எதிர்த்து போராடினார். காரின் கண்ணாடிகளை உடைத்து மனைவியை மீட்க முயன்ற போதும், கண் இமைக்கும் நேரத்தில் பெண்ணை காரில் ஏற்றிக்கொண்டு உறவினர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

பட்டப் பகலில் அரங்கேறிய இந்த சம்பவம் குறித்து சித்திரவள்ளியின் கணவர் அஜித்குமார் மணப்பாறை காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதையடுத்து காவல் உதவி ஆய்வாளர் கதிரவன் தலைமையிலான போலீசார் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு, கடத்திச்செல்லப்பட்டகாரைவிரட்டிச்சென்று மடக்கிப் பிடித்தனர். பின்னர்

சித்திரவள்ளியை பாதுகாப்பாக மீட்ட போலீசார், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரையும் பறிமுதல் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, பெண்ணின் தந்தை மலையாண்டி மற்றும் அவரது உறவினர்கள் என மொத்தம் 4 பேரை கைது செய்த போலீசார், அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். காதல் திருமணத்தை ஏற்க மறுத்ததால் இந்த கடத்தல் முயற்சி நடைபெற்றதா அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என்பது குறித்தும் மணப்பாறை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பட்டப்பகலில் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்ற இந்த துணிகர கடத்தல் முயற்சி சம்பவம் மணப்பாறை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஓசூர் மாநகராட்சி 36வார்டில் சிறுவர் பூங்கா மேயர் துணை மேயர் திறந்து வைத்தனர்



ஓசூர் ஜூலை 7:
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகராட்சி அந்திவாடி பகுதிமக்களின்நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மாநகராட்சி 36வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.பாக்கியலட்சுமி குப்புசாமி முயற்சியினால் உருவான பூங்காவை இன்று ஓசூர் மாநகராட்சி 36வது வார்டில் ஓசூர் மாநகராட்சியும் TVS MOTOR COMPANY SST சீனிவாசன் சர்வீஸ் ட்ரஸ்ட் நிறுவனமும் இணைந்து 20,லட்சம் நிதி உதவியுடன் புதியதாக கட்டப்பட்ட சிறுவர் பூங்கா திறப்பு விழா. இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஏற்பாடு செய்த இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டவர்கள் ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா மற்றும் மாநகராட்சி துணை மேயர் சி.ஆனந்தய்யா உடன் இருந்து ரிப்பன் வெட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சிறுவர் பூங்கா திறக்கப்பட்டது. பிறகு மரக்கன்றுகள் நட்டு பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. பிறகு மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பாக்யலட்சுமி அண்ணாதுரை வருகை புரிந்த மேயர்,மற்றும் துணை மேயர்க்கு பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தனர். இதேபோல் அந்தப் பகுதியில் உள்ள பெண்கள் மாமன்ற உறுப்பினர் பாக்யலட்சுமி அண்ணாதுரைக்கு பொன்னாடை போர்த்தி இனிப்பு வழங்கி மரியாதை செய்தனர்.

இந்த நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் முகமது சபீர் ஆலம் மற்றும் TVS நிறுவனங்களின் தொழிற்சங்க தலைவர் ஆர்.குப்புசாமி TVS SST நிர்வாகிகள் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டனர். மேலும் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர் 36வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பாக்கியலட்சுமி அண்ணாதுரைக்கு அம்பேத்கர்நகர்,அந்திவாடி பொதுமக்கள் ஓசூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பாக்கியலட்சுமி அண்ணாதுரை, இந்தப் பகுதி பொதுமக்கள் நன்றியைத் தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டவர்கள்காங்கிரஸ்கட்சி மாவட்டதலைவர்ஹரிஷ்பாபு,முன்னாள் நகர செயலாளர் தியாகராஜன், மாவட்ட துணை தலைவி சரோஜா, விளையாட்டு அணி மாவட்டதலைவர்பீட்டர்சத்யராஜ், வட்டாரத் தலைவர் கெலமங்கலம் சுந்தர்ராஜ், இளைஞரணி காங்கிரஸ் மாவட்டதலைவர் அனில்குமார், பிரபு,திமுக கழக ஓசூர் மாநகராட்சி தெற்குபகுதிபொருளாளர்சுரேஷ்,மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

# தூய்மைப்பணியாளர்களை பரிசு வழங்கி கௌரவித்த மாவட்ட ஆட்சியர்



நாகர்கோவில், ஜூலை 7
கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மக்கள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர்மு.பிரதாப்தலைமையில்நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கன்னியாகுமரி ாவட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி, அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும்உள்ளாட்சிகளுக்குட்பட்டபகுதிகளைதூய்மையாகவும், முழு சுகாதாரத்துடன் பேணி பாதுகாப்பதில் தூய்மை பணியாளர்களை பாராட்டும் நிகழ்ச்சி நடந்தது. தமிழ்நாடு அரசு தூய்மை பணியாளர்களுக்கு தற்காப்பு உபகரணங்கள், காலை உணவு என பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறது. அதனடிப்படையில் நாகர்கோவில்மாநகராட்சிமேற்குமண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியில் ஈடுப்பட்டு வரும் சாரதா என்பவர் கொட்டும் மழையிலும் தனது தூய்மை பணியினை மேற்கொண்டது பொதுமக்களின் பாராட்டுக்களை பெற்றுள்ளார்கள். அவர்களது இந்த உன்னதமான பணியினை சிறப்பிக்கும் வகையில் நேற்றைய மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அவருக்கு பரிசுப்பொருட்கள் மற்றும் பொன்னாடை போர்த்தி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கௌரவித்தார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.பூங்கோதை, உதவி ஆட்சியர் பயிற்சி மோனிகா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் சுகிதா (பொது), பத்மபிரியா (நிலம்), நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி, மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.சரோஜா, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வழங்கல் துறை சார்பாக, 2024 ம் ஆண்டிற்கான மாவட்ட அளவில் சிறந்த விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர் 3 நபர்களுக்கு ரூ.7,000 மதிப்பில் ரொக்கப்பரிசு மற்றும் நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார். வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர்.பொ. .ஷேக் அயூப், உதவி ஆட்சியர்.பயிற்சி. .சாய்சைதன்யா ஜாதவ் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்.பொது. திரு.உ.முருகேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் .கீதா ராணி, வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான் உள்ளிட்ட பலர் உள்னர்.




வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லீலா அலெக்ஸ், இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் .மா.சிவசுப்பிரமணியன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) .சி. மாறன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் .சரவணன், மாவட்ட வழங்கல்அலுவலர்.சரவணன்,வருவாய்கோட்டாட்சியர்கள்ஏ.செந்தில்குமார்(வேலூர்), செல்வி சுபலட்சுமி (குடியாத்தம்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# குடிநீர் இணைப்பு வழங்காமல் 4 ஆண்டுகளாக மாற்று திறனாளி உட்பட 200 க்கும் மேற்பட்டோரை அலைகழிக்கும் பாலக்கோடு பேரூராட்சி நிர்வாகம்



தருமபுரி ஜூலை 07
தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சியில் உள்ள கோட்டை தெருவை சேர்ந்த கூலி தொழிலாளி குணசேகரன் (வயது37) மாற்று திறனாளியான இவரின் மனைவியும் வாய் பேச முடியாத மாற்று திறனாளியாவர்.இவர் தனது வீட்டிற்க்கு குடிநீர் இணைப்பு வழங்க கோரி கடந்த 2022 ம் ஆண்டு பேரூராட்சி நிர்வாகத்திற்க்கு மனு செய்தார்.பேரூராட்சி நிர்வாகத்தின் ஆலோசனைப்படி குடிநீர் இணைப்பு வழங்க ரூ.14,500க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். இதனை பெற்றுக் கொண்ட பேரூராட்சி நிர்வாகம் மேலும் ரூ. 5,000 வழங்கினால் தான் குடிநீர் இணைப்பு தர முடியும் என கட்டாயப்படுத்தி உள்ளனர். குணசேகரன் குடிநீர் இணைப்பிற்க்கு கட்ட வேண்டிய பணம் கட்டி விட்டதாகவும்,மேலும் கொடுக்க தன்னிடம் பணம் இல்லை என கூறி குடிநீர் இணைப்பு தர மன்றாடி உள்ளார். ஆனால் கடந்த 4 வருடங்களாக இதுவரை குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை.குடிநீருக்காக போராடி வரும் இவர் மாற்று திறனாளி என்பதால் நீண்ட தூரம் சென்று தண்ணீர் கொண்டு வர பெரும் சிரமம் அடைந்து வருவதாகவும்,தனக்கு உடனடியாக குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார்.இது குறித்து பாலக்கோடு சமூக ஆர்வலர் சிவா கூறும் போது பாலக்கோடு பகுதியில் 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் குடிநீர் இணைப்பிற்க்கு பணம் கட்டி கடந்த 4 ஆண்டுகளாக காத்திருப்பதாகவும்,கூடுதல் பணம் தராததால் பேரூராட்சி நிர்வாகம் வேண்டும் என்றே குடிநீர் இணைப்பு தராமல் காலம் தாழ்த்தி வருவதாகவும்,எனவே பேரூராட்சி நிர்வாகம் மீது உரிய நடவடிக்கை எடுத்து குடிநீர் இணைப்பிற்காக பணம் கட்டிய அனைவருக்கும் உடனடியாக குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும் என பி. கே. சிவா சமூக ஆர்வலர், குணசேகரன் மாற்றுத்திறனாளி ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில் தலைமை பட்டரிடம் நூதன மோசடி



ஸ்ரீரங்கம், ஜூலை 7
ஸ்ரீரங்கம் கோயில் தலைமை அர்ச்சகர் சுந்தர் பட்டரின் மனைவியின் வாட்ஸ்அப் கணக்கை ஒரு கும்பல் ஹேக் செய்து ரூ.1 லட்சம் வரை பணம்பெற்று மோசடி செய்துள்ள சம்பவம் திருச்சியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்த விபரம் வருமாறு, ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோயில் தலைமை அர்ச்சகரான சுந்தர் பட்டரின் மனைவியின் வாட்ஸ்அப் கணக்கை அடையாளம் தெரியாத சைபர் மோசடி கும்பல் ‘ஹேக்’ செய்து அவரது வாட்ஸ்அப் கணக்கு மூலம் நண்பர்கள், உறவினர்கள் உள்ளிட்டோருக்கு அவசர தேவைக்கு பணம் தேவை என கேட்டுள்ளனர்.

இதைத்தொடர்ந்து, சிலர் சுந்தர் பட்டரை தொடர்பு கொண்டு கேட்டபோதுதான், இந்த முறைகேடு வெளிச்சத்துக்கு வந்தது. இதையடுத்து, திருச்சி சைபர் கிரைம் போலீஸில் சுந்தர் பட்டர் புகார் அளித்துள்ளார்.

இதுகுறித்து ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில் தலைமை பட்டர் சுந்தர் பட்டர் கூறியதாவது: எனது மனைவியின் வாட்ஸ்அப்கணக்கில்இருந்துபணம்கேட்டுகுறுஞ்செய்தி வந்ததால், பலரும் என்னை தொடர்பு கொண்டு எவ்வளவு பணம்வேண்டும்எனவிசாரித்தனர்.அப்போதுதான்ஏதோ மோசடி நடைபெறுவதை உணர்ந்து, நாங்கள் யாரிடமும் பணம் கேட்டு குறுஞ்செய்தி அனுப்பவில்லை. யாரும் பணம் அனுப்ப வேண்டாம் என ஒவ்வொருவரையும் அழைத்துத் தெரிவித்தேன். ஆனால், அதற்குள் 3 பேரிடம் ரூ.1 லட்சத்தை அந்த மோசடி கும்பல் வங்கிக் கணக்கு மூலம் பெற்றுவிட்டனர். இதுகுறித்து போலீஸில் புகார் அளித்துள்ளேன் என்றார்.

## வேலூர் ஒன்றிய தவெக சார்பில்

# முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



வேலூர், ஜூலை 07
தவெக. அரசு மீதான தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு வேலூர் ஒன்றிய தவெக சார்பில் ஊசூரில் நடந்த விழாவில் அமைச்சர் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட விசெயலாளர்கள் வேல்முருகன், நவீன், எம்எல்ஏக்கள் வினோத் கண்ணன், சுதாகர், சிந்து, ஒன்றிய செயலாளர் தனசேகர். தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் 52வது பிறந்த நாளை முன் னிட்டு அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேலூர் ஒன்றிய தவெக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங் கும் விழா நடந்தது.

அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி வேலூர் ஒன்றிய தவெக சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் 52வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஊசூர் குளத்துமேடு பகுதியில்நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று மாலை நடந்தது. விழா வுக்கு வேலூர் ஒன்றிய மாவட்ட செயலாளர்கள் வேல்முருகன், நவீன். எம்எல்ஏக்கள் வேலூர் வினோத் கண்ணன், காட்பாடி சுதாகர், குடி யாத்தம் சிந்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் எல்.தனசே கர் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கைத்தறி, துணி நூல் துறை அமைச்சர் விஜய் பாலாஜி கலந்து கொண்டு 1500 பேருக்கு சேலைகளையும், தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள், பாது காப்பு கையுறைகள், மளிகை மோதிரத்தையும் வழங்கி பேசினார். சாமான்களையும், பிறந்த குழந்தைகளுக்கு மக்களின் நலனுக்காகவே முதல்வர் ஜோசப் அப்போது அவர், 'தமி விஜய் பாடுபட்டு வருகி வருகிறார். அவருக்கு என் திட்டங்களையும் வழங்கிறார். மேலும் பல்வேறு றும் துணையாக இருக்க வேண்டும்' என்று பேசி னார். நிகழ்ச்சியில் தவெக மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், ஊராட்சி நிர்வாகிகள், தொண்டர்கள். பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.


# சமூக திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தைச் சேர்ந்த பெண்கள் உலக சாதனை முயற்சி



கோவை ஜூலை:07
கோவை மாவட்டம் போத்தனூர் சாலையில் உள்ள தனியார் திருமண அரங்கில் சமூகத்திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட பெண்கள் ஊசி முனையில் வறுமையை விரட்டுவோம் என்ற கருத்துடன் ஊசியில் துணிப்பைகளை தைத்து சாதனை முயற்சி செய்தனர். மேலும் முப்பெரும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பெண்களுக்கு உலக சாதனை முயற்சி, நெகிழி ஒழிப்பு உறுதிமொழி, மகளிர் வாழ்வாதார மேம்பாடு, அரசு நலத்திட்டங்கள் குறித்த விளக்கம், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், திறன் மேம்பாட்டு திட்டங்கள் குறித்து பெண்களுக்கு விளக்கம் அளித்தனர். இந்த நிகழ்ச்சியில் கோவை குறிச்சி பிரிவு வியாபாரிகள் நல சங்கம், கோயம்புத்தூர் ஜே சி ஐ மெட்ரோ போலீஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஆரல்வாய்மொழியில்

# 536 கிலோ குட்காவுடன் கார் பறிமுதல்; டிரைவர் தப்பியோட்டம்



நாகர்கோவில், ஜூலை 7
கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தலை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், மாவட்டகாவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின் பேரில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, ஆரல்வாய்மொழி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் குட்கா கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், ஆரல்வாய்மொழி போலீசார் தீவிர சோதனை நடத்தினர். செண்பகராமன் புதூர் பகுதியில் சோதனை மேற்கொண்ட பொழுது காரில் வந்த மர்ம நபர்கள் காரை விட்டு தப்பி ஓடிவிட்டனர். காரை கைப்பற்றிய காவல்துறையினர் சோதனை செய்த பொழுது அதில் 37 சாக்கு மூடைகளில் 536 கிலோ அரசால் தடை செய்யப்பட்ட குட்கா இருந்தது தெரியவந்தது. பறிமுதல் செய்த புகையிலை பொருட்கள் மதிப்பு ரூ 1 லட்சத்து 15 ஆயிரம் என தெரிகிறது. காரை பறிமுதல் செய்து ஆரல்வாய்மொழி போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

மேலும் தப்பி ஓடியவர்களை தேடி வருகின்றனர்.

## கோவையில்

# 58 லட்சம் மோசடி பாதிக்கப்பட்ட பொது மக்கள் காவல் கண்காணிப்பாளரிடம் புகார்



கோவை ஜூலை:07
கோவை மாவட்டம் வேடப்பட்டி பகுதியை சேர்ந்தவர் 37 வயதான பிரதிப்ராஜன், இவர் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுடன், கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரை சந்தித்து பரபரப்பு புகார் மனு ஒன்றை வழங்கினார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து கூறிய அவர் கூறியதாவது, நான் வேடப்பட்டி பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஏலச்சுட்டு நடத்தி வருகிறேன்.அந்த ஏழு சீட்டு எனது குடும்ப உறுப்பினர்களுக்காக,எனது சொந்த பந்தங்களுக்காக உருவாக்கப்பட்டது.அதில் வெளி நபர்கள் யாரையும் சேர்த்துக் கொள்ள மாட்டோம்.இந்த நிலையில் எங்களது பகுதியைச் சேர்ந்த திமுக வார்டு கவுன்சிலர் தானும் உங்களது ஏல சீட்டில் இணைந்து கொள்வதாக தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்.

அதனை மறுத்து வந்தேன்.ஆயினும் அவர் எங்களது பகுதி கவுன்சிலர் என்பதால் தொடர்ந்து மறுப்பு தெரிவிக்க முடியாமல்,அவரை கடந்த 2021 ஆம் ஆண்டு குழுவில் இணைத்து கொண்டேன். மேலும் ஒவ்வொரு குழுவிலும் தலா 10 சீட்டு என்ற வகையில் சுமார் 100க்கும் மேற்பட்ட சீட்டை அவர்களது, குடும்பத்தை சேர்ந்தவர்களை இணைந்து கொண்டு ஒவ்வொரு முறையும் சீட்டு பணத்தை பெற்றுக் கொண்டு, தற்பொழுது அதனை முறையாக, மாதாந்திர தவணையில் செலுத்தாமல், பல்வேறு காரணங்களை சொல்லி அலைக்கழித்து வருகின்றனர். இந்த நிலையில் அவர்கள் கொடுக்க வேண்டிய தொகை, தற்போது 58லட்சத்து54ஆயிரத்து815ரூபாய்,இந்த பணத்தை, திருப்பி தர மறுப்பு தெரிவித்து வருகின்றனர். இதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, கட்சியின் பெயரை பயன்படுத்தி வழக்கு பதிவு செய்யாமல், எங்களை மிரட்டி வருகிறார், எனவே அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.